03.06.2024 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை.(ஒ.எஸ்.எண்.173/2022 திரு.மொட்டையசாமி.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை–</u>

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால்கொத்தனார் வேலை செய்கிறேன். கடை நடத்தி வருகிறேனா என்றால் அப்பா நடத்தி வருகிறார் கடை உள்ளது. பிரதிவாதி முருகன் எனது வீட்டு பக்கம் இருந்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதி முருகன் சமையல் கூலி வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதி முருகன் வீட்டிற்கு மேற்கே தான் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு வடக்கே முத்துராமலிங்கத் தேவருக்குப் பாத்தியப்பட்ட காலிமனை உள்ளது என்றால் காலிமனை இல்லை. பிரதிவாதி முருகன் வீட்டிற்கு கிழக்கு பக்கம் தென்வடல் ரோடு உள்ளது என்றால் சரிதான்.2 வது தபசில் சொத்திற்குரிய ஆவணங்களை வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2 வது தபசில் சொத்து பிரதிவாதி முருகன் வீட்டிற்கு வடபுறம் உள்ள காலி மனை என்றால் இல்லை அவர் வீட்டிற்கு வடபுறம் உள்ளதை அவர் தான் அனுபவித்து வருகிறார். என் வீட்டிற்குமுன்புறம் உள்ள இடத்தை நான் அனுபவித்து வருகிறேன். எனது பிராது பாரா 5 ல் 2 வது தபசில் இடம் எனக்கு எவ்வாறு பாத்தியம் என்று சொல்லியுள்ளேன் என்றும் நான் வாய்மொழியாகத்தான் பாத்தியம் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆம் வாய்மொழியாகத்தான் பாத்தியம். 2 வது தபசில் சொத்து பாத்தியம் என்பதற்கு வருவாய் ஆவணத்தினை பிராதுடனோ எனது விசாரணையின் போது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2 வது தபசில் சொத்து எனது இடம் என்பதற்கு சர்வேயர் மூலம் அளக்க முயற்சி செய்தேனா என்றால் இல்லை. 1 வது தபசில் சொத்தை கிரையம் பெற்றுவிட்டு பிரதிவாதியின் வீட்டிற்கு முன்புள்ள இடத்தை தனது இடம் என்று 2 வது தபசில் சொத்தாக காண்பித்துள்ளேன் என்றும் அது பிரதிவாதியிக்கு அவரது தகப்பனார் வழியில் பட்டாவில் கண்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். 1,2 பிரதிவாதிகளுக்கு 1 ம்பிரதிவாதியின் தகப்பனார் இருளப்ப பிள்ளைக்கு 2 ம்தபசில் சொத்து தோராய பட்டா எண்.28–ன் படி பாத்தியப்பட்டு அவர் பிரதிவாதிக்கு 07.08.2012 ல் ஒரு பதிவு பெற்ற தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் சார்பதிவாளர் ஆவண எண்.8239/2012 ஆவணம் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அவர்களுக்கு அங்கு இடமே கிடையாது

அந்த இடம் நத்தம் புறம்போக்கு அதில் நாங்கள் தான் மாடு கட்டி அனுபவித்து வருகிறோம். 2ம் தபசில் சொத்தின் சர்வே எண்.266/2019 என்றால் சரிதான். 2ம்தபசில் சொத்து வருவாய் ஆவணங்களில் இருளப்ப பிள்ளை பெயரில் உள்ளது என்றால் இதுவரை இல்லை இவர்கள் தற்போது பன்னியிருக்கலாம். சர்வேயர் வந்து இடத்தை அளந்தார்களா என்றால் அதிகாரிகள் வந்து பார்த்தார்கள் வெளி ஆட்கள் வந்ததை நான் தடுத்துவிட்டேன். எனக்கு 1வது தபசில் சொத்து 22.01.2015 தேதிய கிரையம் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு 2012ஆண்டே தானசெட்டில்மெண்ட் ஏற்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்குதெரியாது நாங்கள் தான் புழங்கிக்கொண்டு இருக்கிறோம். எங்களுக்கு கொடுத்த ஆள் தான் அவர்களுக்கும் கொடுத்துள்ளார் அவர்கள் வீட்டிற்கு முன்பு அவர்கள் புழங்கி வருகிறார்கள் எங்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தை நாங்கள் புழங்கி வருகிறோம். 2வது தபசில் சொத்து வடக்கிலும்,முருகன் வீடு தெற்கிலும் அமைந்துள்ளது என்றால் முருகன் வீட்டிற்கு வடக்கு புறம் அவர் இடமும் என்வீட்டிற்கு வடபுறம் எனது இடம் உள்ளது. முருகன் வீட்டிற்கு கிழக்குபுறம் தென்வடல் தெரு உள்ளது என்றால் சரிதான். 2வது தபசில் வீட்டிற்கு மேற்கே முத்துராமலிங்கத்தேவர் இடம் உள்ளது என்றால் தவறு என் வீட்டிற்குமேற்கே தான் முத்துராமலிங்கத்தேவர் இடம் உள்ளது. 2வது தபசில் சொத்திற்கு வடபுறம்துர்க்கையம்மன் கோவில்உள்றது என்றால் என் வீட்டிற்கு முன்புகோவில்எதுவும் இல்லை காலிமனையாகத்தான் உள்ளது. வழக்கு தாக்கல் செய்த போது பிராதை படித்துப்பார்த்தேனா என்றால் படிக்கவில்லை. பிராதில் 2வது தபசிலாக சர்வே எண்.173/1 ஆக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். 1வது தபசிலுக்கும் சர்வே எண்.173/1ஆக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். 2வது தபசில் சொத்தை நான் சட்டப்படி கிரையம் செய்யவில்லை என்றாலும் அதனால் தான் எனக்கு அதில் எனக்கு சட்டப்படியான உரிமை இல்லை என்றால்சரியல்ல. அதனால் தான் வருவாய் ஆவணங்களை வழக்கில் தாக்கல்செய்யவில்லை என்றால்சரியல்ல. 2வது தபசில் 1ம்பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட இடம்என்றாலும் வருவாய்துறை ஆவணங்களிலும் அவரின் பெயர் தான் உள்ளது என்றால் சரியல்ல. நான் ஒப்புக்கொண்டபடி வாய்மொழி கிரையம் என்பது செல்லாது என்றால்சரியல்ல. எனது வழக்கை பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
03.06.2024.